DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.88/2015**

Deposition of :PW -14

| | | |
|---|---|---|
| Name | : Dr.அருண்பிரபாகரன் | Caste: |
| Father's Name: | திரு. சந்திரசேகரன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 7th day of August - 2023.

**A1, A4 and A6 Present. A2 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 not produced. Counsel for all Accused present.**

**07.08.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துகல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 19.10.2013 அன்று மேற்படி மருத்துவமனையில் அவசரசிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது பிற்பகல் 2.35 மணியளவில் ராசாத்தி, வயது 58, க/பெ.ராமகிருஷ்ணன், பாலாஜி நகர், சின்னதிருப்பதி, சேலம் என்ற நபர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். நான் நோயாளியை பரிசோதித்த போது அவர் Drowsy நிலையில் காணப்பட்டார்.

நோயாளின் உடலில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. அவரது நடுமண்டையில் ஆழமான கிழிந்த காயம் காணப்பட்டது அந்த காயத்தின் வழியாக மண்டைஓடு தெரிந்தது. அந்த காயம் L வடிவத்தில் காணப்பட்டது. அதன்

அளவு 10x5x5 செ.மீ.

2. மேற்கண்ட காயத்தின் அருகில் மற்றொரு கிழிந்த காயம் 8x3x2 Cm அளவில் காணப்பட்டது.

3. இடது மண்டையில் 5x2x2 Cm அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது.

4. இடது பக்க மண்டையில் மூன்றாவது காயத்தின் அருகில் மற்றொரு கிழிந்த காயமானது 5x2x2 Cm அளவில் காணப்பட்டது.

5. இடது தோள்பட்டை காரை எலும்பிற்கு பக்கத்தில் ஒரு குத்துக்காயமானது 1x0.5x0.5 Cm அளவில் காணப்பட்டது.

அந்த நோயாளிக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டது. என்னால் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.28. நோயாளி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். மேற்படி நோயாளிக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை குறித்து நான் ரிப்போர்ட் வழங்கியிருக்கிறேன். அந்த ரிப்போட்டில் நோயாளிக்கு இடது கையின் மோதிரவிரலில் இரண்டு எலும்பு முறிவுகள் ஏற்பட்டிருந்ததாகவும் மற்றும் நோயாளியின் இரண்டு மற்றும் மூன்றாவது விரல்களில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததாகவும், அந்த காயங்கள் கொடுங்காயங்கள் என்றும் கருத்து தெரிவித்து இருக்கிறேன்.

என்னால் வழங்கப்பட்ட மேற்படி ரிப்போர்ட் அ.சா.ஆ.29. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நோயாளிக்கு தலையில் ஏற்பட்ட காயங்கள் சம்மந்தமாக நான் கருத்துரை எதுவும் வழங்கவில்லை.

<u>அனைத்து எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை</u>

மேற்படி நோயாளிக்கு கை விரல்களில் ஏற்பட்டிருந்ததாக அ.சா.ஆ.29 ரிப்போட்டில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று எலும்வு முறிவுகள் சம்மந்தமான வெளிப்புற காயங்கள் எதுவும் நோயாளியை நான் மருத்துவமனையில் அனுமதித்தபோது பதிவு செய்த விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னால் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகலில் நோயாளி 19.10.2013 அன்று காலை 8.00 மணி முதல் 8.30 மணிக்குள்ளாக அவரது வீட்டில் வைத்து தெரிந்த 5 நபர்களால்

இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.29 ல் இரண்டு எலும்பு முறிவுகள் நோயாளின் எந்த கைவிரலில் காணப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி காயங்கள் மேற்படி நோயாளிக்கு 19.10.2013 அன்று காலை 8.00 மணி முதல் 8.30 மணிக்குள்ளாக ஏற்பட்டிருப்பதற்கு வாய்ப்புண்டு.

மேற்படி நோயாளிக்கு ஏற்பட்ட காயங்கள் நான் நோயாளியை பரிசோதிப்பதற்கு 14 மணி நேரத்திற்கு முன்பாக ஏற்பட்டிருந்தால் அந்த காயங்களின் தன்மை மாறியிருக்கும் என்றாலும், எனவே அந்த காயங்கள் நான் நோயாளியை பார்ப்பதற்கு 14 மணி நேரங்களுக்கு முன்னதாக ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்றாலும் சரிதான். வாய்ப்பு மிகவும் குறைவு. நான் விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிட்டுள்ள காயங்களில் குத்துக்காயம் நீங்கலாக மற்ற காயங்கள் ஒரு பலமான முனை மழுங்கிய ஆயுதத்தால் தாக்கப்பட்டால் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு.

மேற்கண்ட குத்துக்காயமானது ஒரு மேலேழுந்தவாரியாக காயம் என்றாலும், அந்த காயமானது ஒரு நபர் தலையில் தாக்கப்பட்டு கீழே விழும்போது ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். மேற்படி நோயாளியை உள்நோயாளியாக அனுமதித்து அது சம்மந்தமாக போலிசாருக்கு தகவல் சொல்லியிருக்கிறேன். மேற்படி நோயாளி டிரௌசியாக இருந்தாலும், சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். அந்த நோயாளியின் மரண வாக்குமூலத்தை பதிவு செய்வதற்கு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் வார்டு மருத்துவர் தான் அது சம்மந்தமாக நடவடிக்கை மேற்கொள்வார்.

**மறுவிசாரணை**

19.10.2013 அன்று நான் மேற்படி மருத்துவமனையின் அவசரசிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது பிற்பகல் 3.35 மணியளவில் சுமார் 60 வயது மதிக்கத்தக்க ராமகிருஷ்ணன் என்பவரது பிரேதமானது கன்னங்குறிச்சி காவல்நிலைய முதல்நிலை காவலர் திரு.முருகேசன் என்பவர் மூலமாக ஆஜர்படுத்தப்பட்டது. அந்த பிரேதம் சம்மந்தமாக நான் விபத்து பதிவேடு பதிவு செய்து பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பி

வைத்தேன். அந்த விபத்து பதிவேட்டுநகல் அ.சா.ஆ.30.

அன்றைய தினம் பிற்பகல் 3.45 மணியளவில் சுமார் 32 வயது மதிக்கத்தக்க ராஜசேகர் என்பவரது பிரேதமானது கன்னங்குறிச்சி காவல்நிலைய தலைமை காவலர் திரு.இளங்கோவன் என்பவர் மூலமாக ஆஜர்படுத்தப்பட்டது. அந்த பிரேதம் சம்மந்தமாக நான் விபத்து பதிவேடு பதிவு செய்து பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். அந்த விபத்து பதிவேட்டுநகல் அ.சா.ஆ.31.

**மறுகுறுக்கு விசாரணை இல்லை.**

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem